மலர் முகம்

நம்மைச் சுற்றியுள்ள இயற்கை எழில் இப்பொழுது நம்மை மகிழ்ச்சியாக வாழவைப்பது போல் எம் இந்திய நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தேசத் தலைவர்கள் தங்களது இன்னுயிரை நீத்துச் சுதந்திரம் பெற்றுத் தந்து நம்மை மகிழ்ச்சியாக வாழவைத்துள்ளனர்.

‘‘எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு – நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு’’

என நாம் விடுதலையடைந்த நாளில் பாடி மகிழக் காரணமானவர்கள் நம் தேசத்தலைவர்கள்.

‘‘நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் – இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்’’

என்று நமது இந்திய நாட்டை நாமே உரிமை கொண்டாடக் கொடுத்த நாள் 15.08.1947 ஆம் நாள் ஆகும். அந்த நாள் முதல் இந்த நாள் வரை நாம் எல்லோரும் சுதந்திரக் காற்றை முழுமையாக அனுபவித்துக் கொண்டுள்ளோம்.

தண்ணீர் விட்டா வளர்த்தோம் சர்வேசா!

இப்பயிரை கண்ணீரால் காத்தோம் கருத திருவுளமோ!

என்று பாரதியார் பாடியதை மனதில் நினைத்துப் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும்.

இதன் பயனாய் நம் நாடு பல்வேறு துறைகளில் பொருளாதார வளர்ச்சி அடைந்து வருகின்றது. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர்.

நாம் சுதந்திரம் பெற்று 74 ஆண்டுகளைக் கடந்தது 75 –வது சுதந்திரத் திருநாளில் அடியெடுத்து வைத்து அதைச் சீருடனும், சிறப்புடனும் எமது கல்லூரியில் கொண்டாடத் திட்டமிட்டோம்.

அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி தன்னுடைய பொன்விழா ஆண்டை மகிழ்வாகக் கடந்து வந்த காலத்தில் நமது இந்திய தேசத்தின் 75 –வது (அமுதப்பெருவிழா) சுதந்திரத் தினத்தைப் பெருமையாக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

இதனை மையமாகக் கொண்டு 11.08.2022 முதல் 17.08.2022 வரை கல்லூரியில் உள்ள 11 துறைகளும் தனித்தனியாக ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அங்கு உள்ள ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகளில்

பயிலும் மாணவர்களிடையே தேசப்பற்றை உருவாக்கும் நோக்கில் 1000 தேசியக்கொடிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, நடனப்போட்டி, நாடகப்போட்டி, மாறுவேடப்போட்டி எனப் பல்வேறு போட்டிகளை நிகழ்த்தினர். அம்மாணவர்களின் முயற்சியைப் பாராட்டும் வகையில் எழுதுபொருட்கள் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. நரிக்குறவர் மக்கள் வாழும் பகுதிக்குச் சென்று அவர்களிடையே தேசப்பற்றை உருவாக்கும் நோக்கில் கொடிகளை வழங்கி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

15–08–2022 ஆம் நாள் கல்லூரியில் 75–வது சுதந்திர தினம் – அமுதப் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் கல்லூரிக்கு வருகை புரிந்தனர். வழக்கம் போல் தேசிய மாணவர்படை அணிவகுப்புடன் முதல்வர் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றினார். வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களை வரவழைத்துப் பரிசுகள் வழங்கப்பட்டன. 75–ஆவது சுதந்திரத்தின சிறப்பு நிகழ்வுகளாகக் கல்லூரியில் உள்ள அனைத்துத் துறைகளும் ஒற்றுமையாக இணைந்து 75 நிகழ்ச்சிகளைக் கண்காட்சியாக அமைத்துக் காட்சிப்படுத்தினர். அந்நிகழ்வுகளின் பட்டியல் இவண் இடம்பெற்றுள்ளது. அக்கண்காட்சியில் சிறப்பு விருந்தினர்களாக,

1. உயர்திரு. **P.வேலுச்சாமி** M.P, அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர், திண்டுக்கல்.
2. உயர்திரு. **I.P.செந்தில்குமார்** M.A.,B.L., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர், பழனி.
3. திருமதி. **R.உமாமகேஸ்வரி** அவர்கள், நகர்மன்றத்தலைவர், பழனி.
4. உயர்திரு. **நா.நடராஜன்** M.Sc.,B.L., அவர்கள்,
   தாளாளர், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி.
5. உயர்திரு. **அ.இரா.பிரகாஷ்** B.Sc.,M.L., அவர்கள்,
   துணைஆணையர் / செயலர், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி.

முதலானோர் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டனர். கண்காட்சியில் இடம்பெற்றுள்ள இணைத்து நிகழ்ச்சிகளும் காண்போரின் மனதைக் கவர்ந்து தேசப்பற்றை ஊட்டும் எழுச்சி மிகும் நிகழ்ச்சியாக அமைந்தது.

75-வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா
2022 - 2023

நாள் : 06.08.2022 நேரம் : முற்பகல் 10.00 மணி

இடம் : கல்லூரி வளாகம்

75 நிகழ்ச்சிகள்

1. தேசத்தலைவர்களின் படங்களுக்கு வீரவணக்கம் செலுத்துதல்.
2. 75 அகல் விளக்கு ஏற்றுதல்.
3. 75 மாணவர்களை மூவண்ணத்தில் நிறுத்தி 75 th Independence Day என வடிவமைத்தல்.
4. தேசியக்கொடி அமைப்பில் மாணவர்களை மூவண்ணத்தில் நிறுத்துதல்.
5. 1947 முதல் இன்று வரை உள்ள பிரதம மந்திரிகளின் படங்களைக் காட்சிப்படுத்துதல்.
6. இந்தியாவின் அதிசயக் கட்டிடங்களின் மாதிரிகளைக் காட்சிப்படுத்துதல்.
7. 22 இந்திய மொழிகளில் 75வது சுந்திர தின வாழ்த்துக்கள் கூறுதல்.
8. 75 மாணவர்கள் சேர்ந்து குழுவாகப் பாடுதல்.
9. இளைஞர் நலக் கழக மாணவர்கள் கவிதை வாசித்தல்.
10. இளைஞர் நலக்கழக மாணவர்கள் பேசுதல்.
11. ஒரு மணித்துளியில் மாணவர்கள் தேசப்பற்றை உணர்த்துதல்.
12. இந்தியா அமைப்பில் மூவண்ணத்தில் மாணவர்களை நிறுத்துதல்.
13. வாழும் பாத்திரங்கள் – தேசத்தலைவர்கள் வேடம்.
14. ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் காட்சிப்படுத்துதல்.
15. இந்தியக் குடும்பங்களை மாநிலங்கள் வாரியாகக் காட்சிப்படுத்துதல்.
16. விடுதலைப் போராட்ட வீரர்களுடன் நேர்காணல்.
17. மூவண்ணக் கோலம் போடுதல்.
18. விடுதலை வீரரின் ஆவணம் காட்சிப்படுத்துதல்.
19. காந்தியின் ராட்டை வடிவைக் காட்சிப்படுத்துதல்.
20. பாரதமாதா ஓவியம் போன்ற காந்தி விரும்பிய உணவுப்பொருட்களைக் காட்சிப்டுத்துதல்.
21. காந்தியின் உணவு போன்ற காந்தி விரும்பிய உணவுப்பொருட்களைக் காட்சிப்படுத்துதல்.
22. தேசப்பற்றை உணர்த்தும் பொருட்களின் கண்காட்சி.
23. மாறுவேடம் – தேசப்பற்றை உணர்த்தும் ஆடைகள் அணிதல்.

24. தேசப்பற்றை உணர்த்தும் ஓவியம் – அட்டைக் கண்காட்சி.
25. கலாச்சார மாற்றங்களை அன்றுமுதல் இன்றுவரை காட்சிப்படுத்துதல்.
26. தேசப்பற்றை உணர்த்தும் மௌன நாடகம்.
27. மூவண்ணத்தில் அமைதிப்புறா வடிவமைப்பு
28. தேசப்பற்றை உணர்த்தும் சான்றிதழ்கள்
29. அன்று முதல் இன்று வரை பொருளாதார வளர்ச்சி மாற்றம்.
30. சிலம்பம் ஆடுதல்.
31. யோகாசனம் செய்தல்.
32. பிரமிடு செய்தல்.
33. கொடி காத்த குமரன் – தேசப்பற்றை வெளிப்படுத்துதல்.
34. அரிய நூல்களைக் காட்சிப்படுத்துதல்.
35. விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த செய்திகள் உள்ள நூல்களைக் காட்சிப்படுத்துதல்.
36. கரகாட்டம்
37. காவடியாட்டம்.
38. கட்டைக்கால் ஆட்டம்.
39. குதிரை ஆட்டம்.
40. மாடாட்டம்
41. ஒயிலாட்டம்.
42. தேசப்பற்றை உணர்த்தும் குழு நடனம்.
43. தேசப்பற்றை உணர்த்தும் தனி நடனம்.
44. பல்லாங்குழி விளையாடுதல்
45. தாயம் விளையாடுதல்
46. கில்லி விளையாடுதல்
47. பாண்டி விளையாடுதல்
48. பூப்பறிக்க வருகிறோம் விளையாடுதல்.
    குலை குலையா முந்திரிக்கா – விளையாடுதல்.
49. அம்மிக்கல், ஆட்டுக்கல், மாவரைக்கும் திருகை, உலக்கை, மரக்கால், கஞ்சி உணவருந்தும் வெண்கலக்கும்பா, சிம்னி விளக்கு, ஹரிக்கன் விளக்கு ஆகியவற்றைக் காட்சிப்படுத்துதல்.
50. சுகாதார விழிப்புணர்வு (Video) ஒளிப்படம் காட்டுதல்.
51. மரம் நடுதல்.
52. தேசியக்கொடியுடன் தொடரோட்டம்.

53. சமுதாய மேம்பாட்டுக்கான விழிப்புணர்வு மௌன நாடகம்.
54. தேசப்பற்றை உணர்த்தும் மனிதச் சங்கிலி.
55. தேசப்பற்றுக்கான தெரு நாடகம்.
56. தேசப்பற்றை உணர்த்தும் அந்தாதி – சொல் விளையாட்டு.
57. மனித நேயம் காக்கும் முதல் உதவி.
58. எழுத்துக்களை வரிசைப்படுத்துதல்.
59. தேசப்பற்றை மையமாகக் கொண்ட குழு கலந்துரையாடல் (Jumbled Letters)
60. தேசப்பற்று உறுதிமொழி எடுத்தல்.
61. தொடர் ஒளிப்படக் காட்சி (Connection Bioscope)
62. தேசப்பற்றை உணர்த்தும் நாடகம்.
63. நவதானியங்களால் ஆன ஓவியம்.
64. முன்னோர்கள் வாழ்க்கைக்கு உதவிய மண்பாண்டங்களைக் காட்சிப்படுத்துதல்.
65. நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் விவசாயம் குறித்துப் பேசுதல்.
66. 75 வகையான மூலிகைச் செடிகளைக் காட்சிப்படுத்துதல்.
67. 75 வகையான விதைகளைக் காட்சிப்படுத்துதல்.
68. 75 விதைப் பந்துகளை உருவாக்கிக் காட்சிப்படுத்துதல்.
69. சிறுதானியங்களைக் காட்சிப்படுத்துதல்.
70. கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்துதல்.
71. தேசப்பற்றை உணர்த்தும் படங்களை உருவாக்கிக் காட்சிப்படுத்துதல்.
72. தென்னைங்கீற்று, பனை ஓலைகளால் வீட்டு உபயோகப் பொருட்களைச் செய்து காட்சிப்படுத்துதல்.
73. இந்தியனாய் இருந்து இந்தியப் பொருட்களை வாங்கும் வணிக மரம் காட்சிப்படுத்துதல்.
74. தேசப்பற்றை உணர்த்தும் நோக்கில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சிவப்பு ரிப்பன் வடிவமைப்பு
75. ஓவியத்துள் மறைந்திருக்கும் தேசத்தலைவர்களைக் கண்டறிதல்.

அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி.

75-வது சுதந்திர நாள் அமுதப் பெருவிழா

பல்வேறு பள்ளிகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் துறைவாரியாகச் சென்று நிகழ்த்திய நிகழ்வுகள் மூலம் விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

வ. எண்.	துறை	நாள்	ஊர், பள்ளி, நிகழ்வுகள் பெயர்கள்
1	பேரவை – சார்பாக முதல்வர் மற்றும் பேராசிரியர்கள்		பழனி – சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற அய்யா அப்துல் ஜாபர் அவர்களைச் சந்தித்தல்.
2.	தமிழ்த்துறை	28.07.2022 29.07.2022	பெத்தநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடியில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் வாயிலாக விடுதலை உணர்வை ஏற்படுத்துதல்.
3.	ஆங்கிலத்துறை	31.07.2022	போடுவார்பட்டி மற்றும் மஞ்சநாயக்கன்பட்டி கிராமப்புற மாணவிகளுக்கு விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
4.	வரலாற்றுத்துறை	30.07.2022 01.08.2022	பாறைப்பட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
5.	பொருளாதாரத்துறை	11.08.2022	சின்னக்கலையம்புத்தூர், விஜயபுர ஊராட்சி மன்ற நடுநிலைப்பள்ளியில் விழிப்புணர்வு உருவாக்குதல்.
6.	வணிகவியல்துறை	01.08.2022	பெத்தநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சமத்துவபுரத்தில் தேசியக்கொடி வழங்கி தேசப்பற்றை ஏற்படுத்துதல்.

வ. எண்.	துறை	நாள்	ஊர், பள்ளி, நிகழ்வுகள் பெயர்கள்
7.	கணிதத்துறை	02.08.2022	பாலசமுத்திரம் ஊர் பொதுமக்களிடம் தேசப்பற்றை உருவாக்குதல்
8.	இயற்பியல் துறை	29.07.2022	விஜயபுர ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தேசப்பற்றை உணர்த்துதல். பாறைப்பட்டியில் விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
9.	வேதியியல்துறை		விஜயபுரம் ராவ்பகதூர் குருசாமி நாயக்கர் நினைவு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
10.	தாவரவியல் துறை	10.08.2020	நெய்க்காரபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
11	விலங்கியல் துறை	26.07.2022	பாறைப்பட்டி கிராமப் பொது மக்களிடம் தேசிய உணர்வை ஊட்டுதல்.
12	கணிப்பொறி அறிவியல் துறை	04.08.2022	பெருமாள்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளியில் தேசிய விழிப்புணர்வை ஊட்டுதல்.

1. விண்ணில் பறக்கும் மூவண்ணக்கொடியுடன் ஆசிரியர்கள்
2. விடுதலைப்போராட்ட வீரர், 3. விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு வீர வணக்கம்

சிறப்பு விருந்தினர்கள் ரிப்பன் வெட்டி கண்காட்சியை துவங்கி வைத்தல்

சிறப்பு விருந்தினர்கள், முதல்வர் அவர்கள் கொடி அசைத்து துவங்கி வைத்தல்

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தேசப்பற்றை உணர்த்தும் வகையில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது

சிறப்பு விருந்தினர்களை இணை ஆணையர் அவர்கள் வரவேற்றல்

சிறப்பு விருந்தினர்களை விழா மேடைக்கு அழைத்துச் செல்லுதல்

தமிழ்த்தாய் வாழ்த்து

தேசத் தலைவர்களுக்கு பூ தூவி மரியாதை செய்தல்

75 மெழுகுவர்த்தி ஏற்றி தேசத்தலைவர்களுக்கு மரியாதை செய்தல்

நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கும் பார்வையாளர்கள்

சிறப்பு விருந்தினர்களை வரவேற்கும் எம் கல்லூரி முதல்வர் தொடக்க விழா

பாராளுமன்ற உறுப்பினர் திரு.பி.வேலுச்சாமி அவர்களின் சிறப்புரை

பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பெ.செந்தில்குமார் அவர்களின் சிறப்புரை

இணை ஆணையர் திரு. ந.நடராசன் உரையாற்றினார்

மூவண்ணங்களில் மாணவிகள்

23 மொழிகளில் சுதந்திர தின வாழ்த்து வசனம் மாணவர்கள்

இந்தியாவின் அதிசயக் கட்டிடங்களின் மாதிரிகள்

75-வது சுதந்திர தின உறுதிமொழி

மூவண்ணத்தில் 75 மாணவிகள்

மூவண்ணத்தில் அமைந்த 75 மாணவிகளின் **“இந்தியா”** வடிவம்

22 மொழிகளில் 75-வது சுதந்திரதின வாழ்த்துக்கள்

1947 முதல் 1922 வரை உள்ள இந்திய பிரதமர்கள்

1947 முதல் 1922 வரை உள்ள இந்திய குடியரசுத்தலைவர்கள்

இந்தியக் குடும்பம்

இந்தியக் குடும்பம்

ஜாலியன் வாலாபாக் நிகழ்வினைப் பார்வையிடும் சிறப்பு விருந்தினர்கள்

ஜாலியன் வாலாபாக் படுகொலையின் காட்சி

இந்தியப் போராட்ட வீரர்களுடன் நேர்காணல்

75 மாணவியரின் தேசப்பற்றுப் பாடல்

மூ வண்ணக்கோலம்

ராட்டை

இந்தியாவின் பிரதான கட்டிடங்களின் மாதிரிகளை பார்வையிடல்

வேலுநாச்சியாரின் வீரமுழக்கம்

பாரதியாரையும், நீதிதேவதையையும் கண்முன் கொண்டு வரும் எம் மாணவிகள்

தென்னங்கீற்று, பனை ஓலைகளால் ஆன காட்சி

இந்தியனாய் இரு, இந்தியப் பொருட்களை வாங்கு

கைவினைப் பொருட்களின் காட்சி

75 வகை விதைகளின் காட்சி

75 விதமான அரிசி வகைகளை பார்வையிடல்

விதைகளால் ஆன தேசத்தலைவர்களின் படங்களை பார்வையிடல்

விதைகளால் ஆன தேசத்தலைவர்களின் படங்கள்

மண்பாண்டங்களின் காட்சி

கொடிகாத்த குமரனின் தேசப்பற்று

சமுதாய மேம்பாட்டுக்கான விழிப்புணர்வு நாடகம்

அரிய நூல்களின் காட்சிகள்

மாணவியர் சிலம்பம் ஆடுதல்

வண்ணத்தில் அமைதிப்புறா வடிவமைப்பு

விடுதலைப் போராட்ட வீரர்களை பற்றிய நூல்கள்

கொடி காத்த குமரன்

கொடி காத்த குமரனோடு உரையாடல்

ஒயிலாட்டம்

காவடி ஆட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டம்

கரகாட்டம்

மயிலாட்டம்

கட்டைக்கால் ஆட்டம்

நாட்டுப்புற நடனம்

நாட்டுப்புற நடனங்களைப் பார்வையிடல்

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மரக்கன்று நடுதல்

இணை ஆணையர் மரக்கன்று நடுதல்

இந்தியக் கொடியுடன் தொடரோட்டம்

தேசப்பற்றை உணர்த்தும் நாடகம்

மாண்குபுமிகு சட்டமன்ற உறுப்பினர் பம்பரம் விளையாடுதல்

சிறப்பு விருந்தினர் உரையாடல்

குலையா குலையா முந்திரிக்கா விளையாட்டு

பல்லாங்குழி விளையாடுதல்

மரபை காக்கும் பழமை

தொடர் ஒளிப்படக்கருவி

தேசப்பற்றை உணர்த்தும் தெரு நாடகம்

மனித நேயம் காக்கும் நாடகம்

தேசப்பற்றை உணர்த்தும் அந்தாதி சொல் விளையாட்டு

75 வகையான மூலிகைச் செடிகள்

ஓவியத்துள் மறைந்திருக்கும் தேசத்தலைவர்களை கண்டறிதல்

தேசப்பற்றுக் குழு கலந்துரையாடல்

மூவண்ணக் கொடியுடன் யோகாசனப் பயிற்சி

யோகா பயிற்சி

75-வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவை முன்னிட்டு கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் 90 வயது உடைய சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற அய்யா அப்துல் ஜாபர் அவர்களை சந்தித்து பழைய நிகழ்வுகளை பற்றி கலந்துரையாடி வாழ்த்து பெற்று மகிழ்ந்த தருணம்

சுதந்திரப் போராட்ட தியாகிகளுடன் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் தேசிய மாணவர்படை மாணவிகள்